★ அரசியல் கட்டுரை
★ நிலா முற்றம்
★ அறிவியல் விடயங்கள்
பல்சுவை அம்சங்களுடன்
★ சாளரம் ★
பாடசாலைகளிலும்
புத்தக நிலையங்களிலும்
பெற்றுக்கொள்ளலாம்
[33165]

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

வெளிவந்துவிட்டது!
★ சாளரம் ★
ஓகஸ்ட் — செப்ரெம்பர் இதழ்
கேணல் கிட்டு நினைவு
சிறுவர் பூங்காவின்
அட்டைப்படத்துடன்
[33165]

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 19 — புதன்கிழமை (05 — 10 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 312

# றாகம பகுதியில் மனித புதைகுழியிலிருந்து சேதமுற்ற எலும்புக் கூடுகள் நேற்று மீட்பு!

## இரண்டாம் கட்டப் பேச்சில் அரசுத் தரப்பில் அமைச்சர்

கொழும்பு, ஒக். 5

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே எதிர்வரும் 13, 14 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பூர்வாங்கப் பேச்சுகளை அடுத்து —

தொடர்ந்து நடைபெறும் இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் போது அரசுத்தரப்பில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவர் பங்குபற்றுவார்.

—''சண்டே லீடர்'' பத்திரிகை இவ்வாறு தகவல் வெளியிட்டுள்ளது.

இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் பின்னரே பிரதமர் சந்திரிகாவுக்கும் விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கும் இடையே நேரடிப் பேச்சுகள் நிகழக்கூடும் என்றும் அப்பத்திரிகை தெரிவித்தது. (உ—எ)

## யுத்த நிறுத்தத்தில் அரசு கவனம் செலுத்தவில்லை

### நாடாளுமன்றில் அனுருத்த தகவல்

கொழும்பு, ஒக். 5

விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வது குறித்து அரசு கவனஞ் செலுத்தவில்லை என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

ஐ. தே. கவின் களுத்துறை மாவட்ட எம். பியான திலக் கருணாரத்னா எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். (உ—6)

## எரிந்த டயர்களும் காணப்பட்டன

கொழும்பு, ஒக்ரோபர் 5

கொழும்பு றாகமவுக்குச் சமீபத்தில் உள்ள மாலபே பகுதியில் போக்கந்தற என்ற இடத்தில் பெரும் மனித புதைகுழி ஒன்று நேற்று தோண்டப்பட்டது.

1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டு இந்தப் புதைகுழியில் புதைக்கப்பட்டதாகக் கருதப்படும் சுமார் 30 பேரில் 17 பலரின் எலும்புக்கூடுகள் நேற்றுத் தோண்டி எடுக்கப்பட்டதாக செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

எலும்புக் கூடுகளுடன் எரிந்த டயரின் எஞ்சிய பகுதிகளும் இப்புதைகுழியில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

1989 ஆம் ஆண்டு இப்பகுதியில் இடம்பெற்ற கண்ணி வெடித் தாக்குதல் சம்பவம் ஒன்றை அடுத்து இப்பகுதியில் இருந்த — 17 முதல் 30 வயதுடைய — சுமார் முப்பது இளைஞர்கள் டயர் போட்டு எரிக்கப்பட்டதாகவும் —

அவர்களின் சடலங்களின் எஞ்சிய பகுதிகளே இப்புதைகுழியில் புதைக்கப்பட்டிருப்பதாகவும் கருதப்பட்டது.

கொழும்பு மேலதிக நீதிவான் சம்பா புத்திபாலவின் உத்தரவின்படி — அவரின் மேற்பார்வையில் — இந்த மனித புதைகுழியைத் தோண்டும் நடவடிக்கை நேற்று ஆரம்பமானது.

புதைகுழி தோண்டப்பட்ட போது அங்கு கடற்றொழில் அமைச்சர் இந்திகா குணவர்த்தனாவும் பிரதி அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியும் சமுகமளித்திருந்தனர்.

இதேவேளை —

புதைகுழிகள் உள்ள இடத்துக்கு காவல் போடுமாறு நீதிவான் விடுத்த உத்தரவை பொலிஸார் புறக்கணித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அந்த இடத்துக்குச் செல்ல வேண்டாம் என்று தலங்கம பொலிஸுக்கு நுகேகொட சிரேஷ்ட பொலிஸ் அதிபர் நவரத்தினம் உத்தரவிட்டிருந்தார் என்று நீதிவானுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தமது உத்தரவை மீறும் செயல் என்றும் —

இது பற்றி உடனடி நடவடிக்கை எடுக்கப்படாவிடின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச ஆசிரிய தினம் நாளை அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 5

உலக ஆசிரியர் நாளை, ஏற்றத்தோடும், எழுச்சியோடும் கொண்டாடுமாறு தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை தமிழீழ மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

சமுதாய ஏற்றத்தின் ஏணிப்படிகளாகத் திகழும் ஆசிரியப் பெருந்தகைகளை ஏற்றிப் போற்றி நன்றி உணர்வை வெளிப்படுத்துமாறும்—

கடந்த ஆண்டினைப் போன்றே கல்விக் கூடங்களில் நாளை 6 ஆம் திகதி பாடசாலை மாணவர்கள், பழைய மாணவர் சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திச் சபையி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திடீர்க் குபேரர்களான அமைச்சர்கள், எம்.பிக்கள்!

### விசாரணை நடத்த உத்தரவு

1977 ஆம் ஆண்டின் பின்னர் — ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில்—சில அமைச்சர்களும் எம். பிக்களும் கூட்டுத்தாபனத் தலைவர்களும் திடீர் குபேரர்களாக எப்படி மாறினர் என்பது குறித்து விசாரணை நடத்துமாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு அரசு உயர் மட்டம் உத்தரவிட்டுள்ளது.

நிதி அமைச்சு வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகை இச்செய்தியை வெளியிட்டுள்ளது.

(உ—எ—6)

## வடக்கிலிருந்து 25 படையணிகள் வாபஸ்!

# யுத்த நிறுத்த உடன்பாட்டுக்கு அரசும் புலிகளும் இணக்கமாம்!

### கொழும்பு ஆங்கில இதழ் தகவல்

கொழும்பு, ஒக். 5

யுத்த நிறுத்த உடன்பாடு ஒன்று குறித்து அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் இணக்கம் ஒன்றுக்கு வந்திருப்பதாக இராணுவப் பேச்சாளர் ஒருவரை மேற்கோள் காட்டி ''த ஐலண்ட்'' நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஒக்ரோபர் 3 ஆம் திகதி பத்திரிகையில் வெளியான அச்செய்தியின் படி—

யுத்த நிறுத்தம் தொடர்பான பேச்சுக்கள் இரு தரப்பினருக்கும் இடையே பெரும்பாலும் முடிவடைந்து விட்டதாகவும்—

யுத்த நிறுத்த அறிவிப்பு கடந்த திங்கட்கிழமை வெளியிடப்படவிருந்ததாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார் என்றும்—

யுத்த நிறுத்தம் பிரகடனம் செய்யப் படும் வரை—மறு அறிவித்தல் வரை— தாக்குதல் நடவடிக்கைகள் அனைத்தையும் ஒத்தி வைக்கும்படி வடக்கு- கிழக்கில் உள்ள இராணுவத் தலைமைக்கும் கட்டளைத் தளபதிகளுக்கும் அறிவிக்கப் பட்டு விட்டதாகவும்—

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திட்டமிடப்பட்ட இராணுவத் தாக்குதல்களை நிறுத்தி வைக்கும்படியும்—

இத் தாக்குதல்களுக்காக தயார் நிலையில் வரிசையாக நிறுத்தப்பட்டுள்ள

(4ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



குறுக்கு வழியிலை குபேரரானவையின்ரை குட்டு உடையப் போகுது கண்டியளோ..!

## மண்டைதிவில் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஒக். 5

மண்டைதீவில் நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர் மோதல் ஒன்றில், லெப்டினன்ட் பாபு (பத்மநாதன் பாஸ்கரன் – வவுனியா) என்ற போராளி வீரச்சாவு அடைந்தார்.

வித்துடல் சுதுமலை வடக்கு, மானிப்பாயிலுள்ள அவரது தற்போதைய இல்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வானொலி அறிவிப்பாளர் சுட்டுக் கொலை

கொழும்பு, ஒக். 5

வவுனியாவில் வன்னி வானொலி அறிவிப்பாளராகக் கடமையாற்றி வந்த ஜிப்ரி ரஜாப்டீனை இனந்தெரியாதவர்கள் சுட்டுக் கொன்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவரின் வீட்டில் வைத்தே அவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ—6)

## படகுச் சேவை இன்று இல்லை நாளை நடக்கும்

யாழ்ப்பாணம், ஒக். 5

கிளாலி — பூநகரிப் படகுச் சேவை இன்று புதன்கிழமை நடைபெறமாட்டாது என்றும் —

நாளை வியாழக்கிழமை விசேட படகுச் சேவை வழமையான நேரத்தில் நடைபெறும் [illegible] புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

(ஓ)

## இலங்கைக்கான செஞ். பிரதிநிதி தலைவர் பிரபாகரனைச் சந்தித்தார்

கொழும்பு, ஒக். 5

செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக்குழுவின் இலங்கைப் பிரதிநிதியாக நான்கு ஆண்டுகள் பணிபுரிந்துவிட்டு அண்மையில் வேறு நாடு சென்ற திரு. டொமினிக் டுபோர் சமீபத்தில் யாழ்ப்பாணத்துக்கு மேற்கொண்ட ''பிரியா விடை பயணத்தின்'' போது விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனைச் சந்தித்துப் பேசினார்.

இத்தகவலை ''சண்டே லீடர்'' ஆங்கில வார இதழ் வெளியிட்டிருக்கிறது.

தமக்குப் பதிலாக இலங்கைப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள திரு. மார்கோ அல்தரை அறிமுகம் செய்யவும் தாம் பிரியாவிடை பெறவும் திரு. டுபோர் யாழ்ப்பாணம் சென்றிருந்தார்.

அங்கு விடுதலைப் புலிகள் இயக்க ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்தார்.

அப்போது திரு. டுபோரை யாழ். நகருக்கு வெளியே உள்ள எண்கோணக் கட்டடம் ஒன்றுக்கு டாக்டர் பாலசிங்கம் அழைத்துச் சென்றார். அங்கு திரு. டுபோர் வெள்ளை நிற தேசிய உடையணிந்த ஒருவருடன் கைகுலுக்கிக் கொண்டார்.

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரன் என்று அவர் திரு. டுபோருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.

திரு. பிரபாகரனுடன் அவரது மனைவி மதிவதனி, மகன் சார்ள்ஸ் அன்ரனி,

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பன்னிரு வேங்கைகள் நினைவாக இன்று எழுச்சிபூர்வ நிகழ்வுகள்

வல்வெட்டித்துறை, ஒக். 5

குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் ஏழாம் ஆண்டு நினைவு தினம் இன்று தமிழீழப் பகுதிகள் எங்கும் அனுஷ்டிக்கப்படுகிறது.

குடாநாட்டில் இந் நினைவு தினத்தை எழுச்சி பூர்வமாக அனுஷ்டிப்பதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகி இருந்தன. இதற்காக குடாநாட்டில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பன்னிரு வேங்கைகளினதும் நினைவாக வல்வெட்டித்துறை திருவிலில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் இன்று அஞ்சலி நிகழ்ச்சிகள் இடம்பெறும். அங்கு இன்று பிற்பகலுக்குப் பின்னர் வீரவணக்கக் கூட்டமும் நடைபெறும். இறுதியாக கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

குடாநாட்டில் பல இடங்களில் நினைவுப் பந்தல்களும், வளைவுகளும் அமைக்கப்பட்டுள்ளன. தொழிற்சாலைகள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் பலவும் மரணித்த பன்னிரு வேங்கைகளின் நினைவாக பிரசுரங்களை வெளியிட்டுள்ளன.

குடாநாட்டில் நகரப்பகுதி

(4ஆம் பக்கம் பார்க்க)

## பழைய இரும்பு விலைக்கு 'கந்துல' கப்பல் விற்பனை

கொழும்பு, ஒக். 5

1992 ஆம் ஆண்டில் கற்பிட்டி கடலில் மூழ்கிய 'கந்துல' கடற்படைக் கப்பலை திருத்தி மீண்டும் சேவைக்கு விடமுடியும் என்று கடற்படை நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஆனால் 5 கோடி ரூபா பெறுமதியான அக்கப்பலின் பாகங்களைக் கழற்றி பழைய இரும்பாக விற்க அரசு தீர்மானித்துள்ளது. இது தொடர்பாக ரெண்டர் கோரப்பட்டுள்ளது.

அப்போதைய கடற்படைத் தளபதி அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோ கொல்லப்படுவதற்கு முன்னர் அவர், 'கந்துல' கப்பலை கற்பிட்டிக் கடலிலிருந்து மீட்டெடுத்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ—எ)

## பொ. ஐ. மு. - மு. காங்கிரஸ் உறவை சீர்குலைக்க முயற்சி

கொழும்பு, ஒக் 5

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையே நிலவும் நல்லுறவை சீர்குலைக்க சில சக்திகள் முயற்சித்து வருவதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைமைப்பீடம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இது குறித்து பிரதமர் சந்திரிகாவை சந்தித்துப் பேசுவது என்று முஸ்லிம் காங்கிரஸின் செயற்குழு கடந்த ஞாயிறு கொழும்பில் கூடி முடிவு செய்துள்ளது.

இரு கட்சிகளுக்கும் இடையேயான நல்லுறவை பிரதமருடன் சந்தித்துப் பேசி உறுதி செய்ய முடியாத நிலை ஏற்படுமிடத்து, தொடர்ந்தும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்திருப்பதா என்பது குறித்து முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் குழுவைக் கூட்டி முடிவு எடுப்பது என்றும் அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (உ—எ)

### அமெ. ஒலிபரப்பு நிலையத்தை ஆட்சேபித்து

# புத்தளத்தில் நடந்த பேரணி மீது சூடு! பொலீஸாரின் வேட்டுக்கு ஒருவர் பலி!!

கொழும்பு, ஒக. 5

புத்தளம் மாவட்டம்—இரணவில என்னுமிடத்தில் அமெரிக்க ஒலிபரப்பு நிலையம் ('' வொய்ஸ் ஒவ் அமெரிக்கா '') அமைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அக்கிராமத்தவர்கள் நேற்று ஊர்வலமாகச் சென்றபோது பொலிஸார் சுட்டதில் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் மூவர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 400 கிராமவாசிகள் அமெரிக்க ஒலிபரப்பு நிலையத்துக்குச் செல்லும் பாதையைத் தடை செய்தனர் என்றும் —

அவர்கள் அங்கிருந்து விலகிச் செல்ல மறுத்தனர் என்றும் —

பிரதிப்பொலீஸ்மா அதிபர் எஸ். பி. ரந்தெனியா தெரிவித்தார்.

ஊர்வலமாகச் சென்றவர்கள் பொலீஸார் மீது கற்களை வீசினர் என்றும் —

அதனைத் தொடர்ந்து கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்து தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அவர் கூறி

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி. பொதுச் செயலர் சோமவன்ஸ அமரசிங்க!

### தேர்தல் ஆணையாளர் அங்கீகாரம்

கொழும்பு, ஒக். 5

ஜே. வி. பியின் சட்டபூர்வமான பொதுச் செயலாளராக சோமவன்ஸ அமரசிங்காவை தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வா அங்கீகரித்துள்ளார்.

இது தொடர்பாக உத்தியோக பூர்வமாக தேர்தல் ஆணையாளர் அலுவலகம் நேற்று அறிவித்தது.

இதேவேளை — வெளிநாட்டில் தங்கியிருப்பதாகக் கூறப்படும் சோமவன்ஸ அமரசிங்க கொழும்பு திரும்ப முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமரசிங்கா போன்ற முக்கிய ஜே. வி. பி. பிரமுகர்களை கொல்லும் திட்டம் ஒன்றை இரகசியப் பொலிஸார் இன்னும் வைத்திருப்பதனால் சோமவன்ஸ அமரசிங்கா நேரடியாக ஜனாதி

(4ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகளில் எவருக்கும் கொள்ளை நோய் இல்லை

### சுகாதார அமைச்சு அறிக்கை

கொழும்பு, ஒக. 5

இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய அகதிமுகாம்களில் தங்கியுள்ளவர்களில் எவருக்கும் கொள்ளை நோய் தொற்றியிருக்கவில்லை என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தியாவிலிருந்து விமானம் மூலம் கொழும்பு திரும்பிய குழந்தை ஒன்று சுகயீனமுற்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது என்றும் —

பாதுகாப்பு நடவடிக்கையாக இந்தக் குழந்தையும், குடும்பத்தினரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்றும் — சுகாதார அமைச்சு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது. (அ—1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### உடன் தேவை

அழகு சாதன விற்பனை நிலையத்திற்கு ஆண்/பெண் விற்பனையாளர் உடன் தேவை, தகுந்த சம்பளம் வழங்கப்படும். தொடர்பு: சுழலகம் (சேக்கிள் சென்ரர்), பிரதான வீதி, சங்கானை. (சி–9261)

### விற்பனைக்கு

3 அங். 4 அங். எஸ்லோன் பைப்புகள், எனாமல் பெயின்ற் ரின்கள், பிளாஸ்ரிக் பாத்திரங்கள், அலுமினியம் ஆப்ப தாச்சிகள், பொலித்தீன் தாள், சொப்பிங் பாக் சகல அளவுகளிலும் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு; நாதன் களஞ்சியம், இல. 213C, கிட்டுசாலை, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். (33180)

7½ K.V. டைனமோவுடன் 17 H.P. ஜெனரேட்டர் லிஸ்டர் இயந்திரம் விற்பனைக்குண்டு. குறிப்பு 5 K.V. ஜெனரேட்டர் மாற்றி எடுப்பதென்றாலும் விரும்பத்தக்கது. செந்தாமரை (ரிக்கோ), 370, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். (சி–9378)

### உடன் விற்பனைக்கு

நல்லின பிறிமா புறொயிலர் கோழிக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. [12 நாட்கள் முடிந்தவை] தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மேஜர் பிரதாப் செட்டி பண்ணை, இராச வீதி, கோப்பாய். (சி–9265)

### புறொயிலர் விற்பனை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள், சேவல் கோழிகள், விறாத்து கோழிக்குஞ்சுகள், இறைச்சிக்கோழிகள் உடன் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். ''மல்லிகாபதி'', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (33188)

### கோழிக்குஞ்சு விற்பனை

பத்து நாட்கள் நிரம்பிய Prima Hyline Brown சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. Prima Broiler குஞ்சுகள் பதிவு செய்து 8–10–94 சனிக்கிழமை பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33192)

### தேவை

பிரபல இசைக்குழுவுக்கு அனுபவம் பெற்ற பாடகர், தபேலா, லீட் - கிற்றார், பேஸ் - கிற்றார் இசைக்கலைஞர்களும் உதவியாளர்களும் தேவை. விவரங்களுக்கு 20 - 10 - 94ற்கு முன்னர் மாலை 4-30—6-30க்கு இடையில் தொடர்பு கொள்ளவும்: இல. 61/1. பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (33118)

### மணிக்கூடுகள் தேவை

பழைய கடிகாரங்கள், மேசை மணிக்கூடுகள், சுவர் மணிக்கூடுகள் நியாய விலைக்கு வாங்கப்படும். மணிக்கூடுகள் அனைத்தும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். நீகன் வாச் வேக்ஸ், 113, பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம். (சி–9377)

### புதிய வகுப்புகள்

விஜயதசமி ஆரம்ப வகுப்புகளிற்கு சேரவிரும்புவோர் 5–10–94 (புதன்) முதல் 14–10–94 (வெள்ளி) வரை விண்ணப்பப் படிவங்களை மன்ற அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். அலுவலக நேரம் 4–30 — 6–30 (மாலை) யாழோசை, 61/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (33117)

### இசை வகுப்புகள்

14–10–94 விஜயதசமி அன்று காலை 9 மணிக்கு கிற்றார், ஓகன், மிருதங்கம், தபேலா வகுப்புகள் ஆரம்பம். அபர்ணாலயா இசைக் கல்லூரி, கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு. (சி–9266)

---

## யாழ். றோட்டரிக் கழகம்

# இலவச கண் சத்திரசிகிச்சை முகாம்-5

யாழ். றோட்டரிக் கழகத்தினரால் 5ஆவது தடவையாக நடத்தப்படும் இலவச கண் சத்திர சிகிச்சை முகாம் இம்முறை சங்கானைப் பகுதி மக்களுக்கு நடைபெற உள்ளது.

கண்ணில் வெண்பூப்படலம் (கற்றரக்ட்) தோன்றுவதால் பார்வைக் குறைபாடுள்ள (45 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஆரம்ப சோதனை நடத்தப்பட்டு, இவர்களில் தெரிவு செய்யப்படுவோருக்கு சத்திர சிகிச்சை செய்யப்படும்.

இடம்: சங்கானை அரசினர் வைத்தியசாலை

காலம்: ஆரம்ப சோதனை 07-10-1994 வெள்ளிக்கிழமை காலை 7மணி தொடக்கம்

சத்திர சிகிச்சை 09-10-1994 ஞாயிற்றுக்கிழமை காலை 7மணி தொடக்கம்

தலைவர்,
யாழ். றோட்டரிக் கழகம்.

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். [சி–9263]

---

உ

## காரைநகர் மணிவாசகர் சபை

# பொதுக் கூட்டம்

காரைநகர் மணிவாசகர் சபையின் பொதுக்கூட்டம் 09–10–1994 ஞாயிற்றுக்கிழமை காலை 9–00 மணிக்கு வட்டுக்கோட்டை நவாலி வீதியில் உள்ள யா/திருஞானசம்பந்த வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும். அன்பர்கள் அனைவரையும் சமுகமளிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

எஸ். ஆர். எஸ். தேவதாசன்.
தலைவர்.

து. நாகேந்திரன்,
செயலாளர்.

காரைநகர் மணிவாசகர் சபை

அன்பளிப்பு:
திருமாட்டி (சிமாட்டி)
யாழ்ப்பாணம். (33181)

---

## தேவை

### மொழிபெயர்ப்புப் பயிலுநர்கள் (ஆங்கிலம், தமிழ்)

தமிழ், ஆங்கிலம் உட்பட க. பொ. த. (சாதாரண) தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். க. பொ. த. (உயர்) தரம் மேலதிக தகைமையாக கருதப்படும்.

18 வயதுக்கு மேற்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். மூன்று மாதங்கள் வரையான முழுநேர வகுப்புகளும் செயல்முறைப் பயிற்சிகளும் இலவசமாக வழங்கப்படும். பயிற்சிக்கால செலவுகள் எம்மால் பொறுப்பேற்கப்படும். பயிற்சி முடிவில் வேதனத்துடன் வேலை வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 12 - 10 - 1994

முகவரி: இல. 700,
மே/பா உதயன், யாழ்ப்பாணம். (33114)

---

## 45-ம் நாள் நினைவஞ்சலி



### அமரர் இராகு சிவசுந்தரம்

தோற்றம்: 24 — 11 — 1949
மறைவு: 22 — 08 — 1994

மணம் பரப்பும் பாசமலராக எமக்காக எந்நாளும் வாழ்ந்த பாசவிளக்கே! எங்களப்பாவே! வாழ்ந்தது போதுமென்று இறைவனழைத்தானோ இல்லை அணைத்தானோ.

எமக்காக வாழ்ந்த உம்மை நினைத்து கலங்குகின்றோம். கண்ணீர் சிந்துகிறோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், அப்பா, அம்மா,
உற்றார், உறவினர்கள்:

சரவணை மேற்கு,
வேலணை.

506/1, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (33189)

---

## ST. JOHN'S COLLEGE JAFFNA

# அனைத்துலக ஆசிரியர் தினம் - 1994

மேற்படி தினம் 06 - 10 - 94 வியாழக்கிழமை காலை 8–15மணிக்கு பரி. யோவான் தேவாலயத்தில் ஆராதனையுடன் ஆரம்பமாகி விழா கல்லூரி மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெறும்.

பெற்றோர், பழையமாணவர்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

— பழையமாணவர் சங்கம்.

(33186)

---

சிவம் வெளியீடு அனைத்தும்

## புதிய தீபாவளி வாழ்த்து மடல்கள்

# விற்பனையாகின்றன

NO.1 — போஸ்கார்ட் P C [அனைத்தும் புதியவை]
NO.1 — கட்டிங்
NO.2 — போட்காட் புதிய சுவாமி
புதிய கவர்ச்சியான பூவகைகள் [புதியவை]
சினிமா பெரியஅளவில் P C [புதியவை]
மற்றும்பல

ஏக விநியோகம்:-
ஸ்ரீகாந் புத்தகசாலை
165, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தலைமையகம்:
மக்மிலன் புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

✶ பரிசு கொடுப்பதற்கு உகந்த சிறுவருக்கான நூல்கள் கைவசம் உண்டு (சி.9375)

---

## யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி

# உலக ஆசிரிய தினம்-1994

மேற்படி ஆசிரிய தினம் 06 – 10 – 1994 வியாழன் காலை 9–00 மணிக்கு எமது கல்லூரியில் கொண்டாடப்படும். பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மாணவர்கள்,
யாழ். மத்திய கல்லூரி.

[சி–9271]

---

## பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம் (வ/து)

# பதவி வெற்றிடம்

### லொறிச் சாரதி - 312/13

மேற்படி பதவிக்கு கீழ்க்காணும் தகுதிகளையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் பத்திரங்களை எமது சங்கக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. வயதெல்லை:-
   18க்கும் 40க்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும்.
   (ப. நோ. கூ. சங்கத்தின் சேவையிலிருப்போருக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது)
2. தகைமைகள்:-
   5ஆம் தரத்திற்கு மேல் சித்தியடைந்திருத்தல் வேண்டும். பஸ்/லொறி/பெட்டியுடன் டிராக்டர் செலுத்தும் அனுமதிப் பத்திரம் வைத்திருத்தல்.
   அத்துடன் அண்மையில் லொறிச் சாரதியின் 4 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
3. பிணை:-
   ரொக்கப் பிணை ரூபா 10,000-/ செலுத்த வேண்டும்.
4. சம்பளம்:-
   ரூபா 805/- — ரூபா 1260/-
   35x7 — 35x8
5. உள்ளடக்கப்பட வேண்டியவை:-
   பிறப்புச்சான்றிதழ், கல்விச்சான்றிதழ், வாகனம் ஓட்டும் அனுமதிப்பத்திரம், நற்சான்றுப் பத்திரங்கள், வதிவுத் தகைமைச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகள்.
6. விண்ணப்ப முடிவு திகதி:
   1994 — 10 — 12

விண்ணப்பப் பத்திரங்களை காரியாலயத்தில் பெற்று, பூர்த்தியாக்கி 1994 – 10 – 12ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் ''தலைவர், பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம், பருத்தித்துறை'' என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டும். நீங்கள் அனுப்பும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''லொறிச் சாரதி பதவிக்கான விண்ணப்பம்'' எனக் குறிப்பிடல் வேண்டும்.

தலைவர்,
பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை.

1994–10–04. (சி–9273)

---

உ

## நமஸ்கரித்து ஆசிபெறுகிறோம்

இதுவரை காலமும் எமது சமூகத்திற்கு ஒரு குரு பீடாதிபதி இல்லாத குறையை நிவிர்த்தி செய்த இந்துமத குருமார் ஒன்றியத்தின் நிர்வாக சபையினருக்கும் அதன் தலைவர் சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள் அவர்களுக்கும் வாழ்த்துத் தெரிவித்து இந்து மத குரு பீடாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டிருக்கும் சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவக் குருக்களை நமஸ்கரித்து ஆசிபெறுகிறோம்.

தர்மசாஸ்தா குருகுல
ஆசிரிய மாணவர்கள்.

(33193)

---

உ
சிவமயம்

## யாழ் \ வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்

[வண்ணை சிவன் கோயில்]

### நவராத்திரி விழா

# விசேட நிகழ்ச்சிகள்

05-10-94 மாலை 6.00 — 7.00
சொற்பொழிவு:- திரு. ஆறு திருமுருகன்
06-10-94 மாலை 6.00 — 7.00
சொற்பொழிவு:- திரு. ஆறு திருமுருகன்
07-10-94 மாலை 6.00 — 7.00 இன்னிசைக்கச்சேரி
08-10-94 ,, ,,
09-10-94 ,, ,,
10-10-94 ,, ,,
11-10-94 ,, ,,
12-10-94 மாலை 6.00 — 7.00
சொற்பொழிவு:- திரு. த. சிவகுமாரன்
13-10-94 மாலை 6.00 — 7.00
சொற்பொழிவு:- திரு. த. சிவகுமாரன்

தர்மகர்த்தா
யாழ் / வண்ணை சிவன் கோயில்

[சி/9275]

---

வீரமாகாளி அம்மன் விளையாட்டுக் கழகத்தினர் நடத்தும்

# மென்பந்து கிரிக்கெற் சுற்றுப்போட்டி

### (6 பேர் 6 ஓவர்)

விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அனுமதிக் கட்டணம்:- 75/-
விண்ணப்ப முடிவு திகதி:- 07-10-1994

விண்ணப்பப் படிவத்தை பெற்று ஒப்படைக்க வேண்டிய முகவரி:

குழந்தைவேல் ஐயா,
வீரமாகாளி அம்மன் கோயில்.

ஜெகன் படப்பிடிப்பாளர்
399, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: வெற்றிபெறும் கழகங்களுக்கும், வீரர்களுக்கும் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

விளம்பர அன்பளிப்பு:
ஜெகன் போட்டோ

(7947)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி வசந்தா யோகேஸ்வரன் அவர்கள்

தோற்றம்: 26 — 09 — 1954
மறைவு 05 — 09 — 1994

எம் இதயத்திலும் இல்லத்திலும் என்றும் குடிகொண்டிருந்த எம் இதய தெய்வமே இன்றோடு ஒரு மாதம் ஓடிவிட்டது. எத்தனை மாதங்கள் ஓடிமறைந்தாலும் உங்கள் அன்பு முகமும் — நினைவுகளும் என்றும் எங்களை விட்டு அழியாதம்மா.

உங்கள் பிரிவால் வாடும்:
கணவன், தகப்பன், தாய்,
அண்ணாமார், அக்காமார், தங்கை,
தம்பி; மைத்துனர்மார்,
மைத்துனிமார்.

''ஜெயமகால்''
சித்தன்கேணி. (7948)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## சாவிலும் திர்க்க தரிசனம்

எதிரியிடம் உயிருடன் பிடிபடுவதைவிட இறப்பதே மேல் என்பது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராட்ட மரபு. அந்த மரபினைக் காப்பாற்றும் வகையில், பலாலி இராணுவ முகாமில் தமது இன்னுயிர்களை ஈந்த தளபதிகள் குமரப்பா, புலேந்திரன் உட்பட்ட பன்னிரு வேங்கைகளின் ஏழாவது ஆண்டு நிறைவு நாள் தமிழீழம் எங்கும் இன்று சிறப்பாக நினைவு கூரப்படுகிறது.

தமிழ் மண்ணையும், மக்களையும் காப்பாற்றி தமிழர்களுக்கென ஓர் அரசை நிறுவி, தமிழர்களின் இறைமையையும், சுதந்திரத்தையும் நிலைநாட்ட வேண்டும் என்பதே தமிழீழ விடுதலைப் புலிகளின் இலட்சியம்.

இந்த இலட்சியத்தை அடைவதற்காகவே, இதுவரை ஆறாயிரத்துக்கும் அதிகமான வேங்கைகள் தமது இன்னுயிரை ஈந்துள்ளனர். அவர்கள் செய்த தற்கொடையின் அறுவடையாகவே, அவர்கள் ஈந்த தியாகத்தின் விளைவாகவே, தமிழர் போராட்டம் இன்றைய நிகரற்ற வளர்ச்சியை, ஒப்பற்ற முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் மூல சக்தியாக விளங்கும் விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்துவதன் மூலமே தமிழர்களின் உரிமைக்குரலை நசுக்கலாம் என்று ஸ்ரீலங்கா அரசு மட்டும் நினைத்ததில்லை.

ஈழத்தமிழர்களின் நண்பனாகக் காட்டிக் கொண்ட, நடித்துக் காட்டிய, இந்தியாவின் சிந்தனையும் அதுவாகவே இருந்தது. தளபதிகள் குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகள் உயிர்த்தியாகம் செய்த ஏழு வருடங்களுக்கு முன்னர் மட்டும் இந்த நோக்கத்துடன் இந்தியா செயற்படவில்லை. இப்போதும் அதே நிலைப்பாட்டிலேயே சிறிதும் அசைவில்லாது நிற்கிறது.

தமிழர்கள் சுதந்திரம் பெற்ற மக்களாக, தங்கள் இறைமையை மீட்டு, தமக்கென ஓர் அரசை, ஒரு நாட்டை அமைக்க எந்தச் சந்தர்ப்பத்திலும் அனுமதிக்கக் கூடாது என்ற கொள்கையை அது இன்னும் கைவிடவில்லை.

ஸ்ரீலங்காவின் புதிய அரசு விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேசி இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு முயற்சிக்கிறது என்ற செய்தியே அதற்கு வேம்பாகக் கசந்துள்ளமை வெளிச்சமாகி இருக்கிறது!

இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியா சம்பந்தப்பட்டபோது — தலையிட்டபோது — தமது பாதுகாப்புக்கு அதுவே பொறுப்பு என்று தமிழர்கள் நம்பினார்கள். ஆனால் அப்போதைய ஸ்ரீலங்கா அரசு தமிழர்களின் பிரதிநிதிகளான, விடுதலைப் போராட்டத்தின் மூலசக்தியான விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தலைவர்களை நியாயமின்றிக் கைது செய்தபோது அவர்களைக் காப்பாற்ற — பாதுகாக்க — இந்தியா தவறிவிட்டது.

இவ்விவகாரத்தில் இந்திய அரசு-ஸ்ரீலங்கா அரசுடன் ஒன்றில் கூட்டுச்சேர்ந்தது அல்லது கொழும்பிடம் தோல்வி கண்டது. அந்த வேளையில் ஸ்ரீலங்காவை மீறி பன்னிரு வேங்கைகளையும் காப்பாற்ற முடியவில்லை என்று அப்போதைய இந்தியத் தூதுவர் டிக்ஸித் இப்போது உண்மையை வெளியிட்டிருக்கிறார். தோல்வியை ஒப்புக் கொண்டிருக்கிறார்.

அந்த உண்மையை, இந்தியாவின் இயலாத் தன்மையை, அந்த இயலாத் தன்மையின் விளைவாக தமிழர்களைப் பாதுகாப்பதற்கு அதற்கு பலம் இல்லாமற் போனதை, அந்தப் பலவீனம் காரணமாக ஸ்ரீலங்கா அரசைப் போலவே தமிழர்களை அழிக்க முற்பட்டதை, முன்னேற்பாடாகவே உலகத்துக்கு சான்று பகர்ந்து எடுத்துக் காட்டும் விதத்தில் பன்னிரு வீரவேங்கைகளினதும் தியாகம் அமைந்தது.

அவர்கள் தமது சாவிலும் ஒரு திர்க்க தரிசனத்தைக் காட்டிச் சென்றனர். அந்த வகையில் அவர்களின் தியாகம் என்றும் நினைவு கூரப்படும். வரலாற்றில் சிறப்பிடம் பெறும்.

## சைவநெறி தேர்வு நவம்பர் 6 இல்

யாழ்ப்பாணம், ஒக். 5

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் ஆண்டுதோறும் நடத்தப்படும் சைவநெறித் தேர்வு நவம்பர் 6ஆம் திகதி ஞாயிறு காலை 8-30 மணி முதல் நடைபெறும்.

ஆண்டு 3- 13 வரை பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றுவார்கள். 310 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறும்.

பரீட்சைக்கு 55 ஆயிரம் மாணவர்கள் தோற்றுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

## ப. நோ. கூ. ச. கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 5

யாழ். மாவட்டத்திலுள்ள பலநோக்குகூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் பொது முகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும்.

இக் கலந்துரையாடலில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராயப்படும்.

(இ-4)

# தனிநாடு தவிர்ந்த ஏனைய அதிகாரங்களை வழங்குவதன் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு

## சண்டே லீடருக்கு ஜே. ஆர். பேட்டி

கொழும்பு, ஒக். 5

மாகாணசபைகள் மூலமும் சமஷ்டி அரசமைப்பைக் கொண்டு வரமுடியும்.

சுதந்திர, தனிநாடாக விளங்குவதற்குரிய அதிகாரங்களை அவர்களுக்கு வழங்குவதைத் தவிர —

'இவ்வளவுதான்; இதற்கு மேலே கிடையாது' — என்று எவராலும் இன்று கூறமுடியாது.

— முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா 'சண்டே லீடர்' வார சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

பேட்டி விவரம் வருமாறு:

கேள்வி: பொ.ஐ.மு. அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சுகள் நடத்துவதற்காக நான்கு உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்றை யாழ்ப்பாணத்துக்கு அனுப்புகின்றது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: இது பற்றி நான் பேசமுடியாது. ஆனால் அரசியல் தீர்வு ஒன்றைக் காணுவது எப்போதும் நல்லது. நாமும் முயற்சித்தோம். பல மாதங்களாக நாம் முயற்சித்தோம். அப்படி இல்லை என்று எவரும் சொல்ல முடியாது.

கேள்வி: இக் கட்டத்தில் யுத்த நிறுத்தத்துக்கு அரசாங்கம் சம்மதிக்க வேண்டுமா?

பதில்: அதற்கு என்னால் பதில் சொல்லமுடியாது. என்ன நடைபெறுகிறது என்பது எனக்கு தெரியாது.

கேள்வி: எந்தத் தீர்வுக்கும் அடிப்படையாக இன்றும் இந்திய - இலங்கை உடன்படிக்கை அமையவேண்டும் என்பது உங்கள் கருத்தா?


பதில்: அந்த உடன்பாடு இப்போது அமுல் நடத்தப்படுகிறது.

கேள்வி: ஆனால் புதிதாக அதிகாரப்பகிர்வு பற்றி அவர்கள் சிந்திக்கின்றார்களே.

பதில்: பிரதான அரசமைப்பு அம்சமாக மாகாண சபை வந்துவிட்டது.

*மாகாணசபை மூலம் சமஷ்டி முறை*

கேள்வி: மேலும் அதிகாரப் பரவலாக்கல் செய்வது பற்றி நடவடிக்கை எடுக்கப்



பட்டு வருகிறது. தற்போதைய சமாதானப் பேச்சுகளின் முழுநோக்கமும் இதுவேயாகும் — அவர்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவது, சமஷ்டி அரசமைப்பு போன்ற முறையைக்கொண்டு வருவது இப் பேச்சின் நோக்கமாக உள்ளது.

பதில்: மாகாண சபைகள் மூலமும் சமஷ்டி அரசமைப்பைக் கொண்டு வரமுடியும். எந்த முறையைக் கொண்டு வந்தாலும் அப் பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட சபைகள் இருக்கவேண்டும். மற்றது அவர்களுக்கு எவ்வளவு அதிகாரங்களைக் கொடுப்பது என்பது.

''இவ்வளவு தான்; இதற்கு மேலே கிடையாது'' என்று எவரும் இன்று கூறமுடியாது—சுதந்திர, தனிநாடக விளங்குவதற்குரிய அதிகாரங்களை அவர்களுக்கு வழங்குவதைத் தவிர.

தனி நாடாகவிளங்கும் அதிகாரங்களை வழங்குவதற்கு நாடு சம்மதிக்காது ஆனால் எவ்வளவு அதிகாரங்களை வழங்குவது என்பதைப் பொறுத்துள்ளது; அதனைநீங்கள் சமஷ்டி என்றழைக்க முடியும், நீங்கள் விரும்பியபடி என்ன பெயராலும் அழைக்க முடியும்.

கேள்வி: என்ன பெயரைக் கொடுத்தாலும் இந்திய-இலங்கை உடன்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்ட மாகாண சபையின் விஸ்தரிப்பாகவே அது இருக்கும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

பதில்: மாகாணசபையின் விஸ்தரிப்பு அல்ல; ஆனால் மாகாணசபைக்கு வழங்கப்பட்டஅதிகாரங்களைஅதிகரிப்பதாகவே அதனை நான் கருதுகின்றேன். பாதுகாப்பு, வெளியுறவு ஆகிய அதிகாரங்களை வழங்குவதன் மூலம் நாட்டுப் பிரிவினைக்கு வரும் வரை ஏனைய அதிகாரங்களை வழங்குவதற்கு ஒரு வரையறை இல்லை.

கேள்வி: இனப்பிரச்சினையில் தங்களுடைய கடந்த கால அனுபவத்தை வைத்து, விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கீழே வைக்கும் சாத்தியம் உண்டா?

பதில்: இக்கேள்விக்கு என்னால் பதிலளிக்க முடியாது. அவர்களின் மனத்தை என்னால் புரிந்து கொள்ள முடியாது.

கேள்வி: எந்தப் பிரச்சினை குறித்து இரு பிரதான கட்சிகளும் இணைந்து செயல்பட முடியும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

பதில்: வடக்கு - கிழக்குப் பிரச்சினை.

*பொருளாதாரத் தடை*

கேள்வி: வடபகுதி மீதான பொருளாதாரத் தடையைத் தளர்த்தி பற்றரிகள் போன்ற பொருள்களை அனுப்ப அனுமதித்துள்ளது பற்றி..

பதில்: மக்களுக்கு உதவுவது நல்ல விஷயம் தானே. அவர்களும் மக்களே. அவர்கள் அவற்றை எமக்கெதிராகப் பாவிக்காதிருந்தால் போதும். நாமும் அதைத்தான் செய்தோம். இந்தியா உணவுப் பொதிகளை விமானத்தில் இருந்து போட்டபோது, அவற்றை நாம் விநியோகிப்போம் என்றுதான் கூறினேன். மக்கள் பட்டினி கிடக்க நாம் அனுமதிக்க முடியாது. பொருள்களை அனுப்புவது என்ற எண்ணம் நல்லதே. பொருள்களை எப்படி அனுப்புகிறார்கள், அவை எப்படிப் பயன் படுத்தப்படுகின்றன —இவற்றை எல்லாம் அரசுதான் கவனிக்க வேண்டும்.

கேள்வி: விடுதலைப் புலிகளுடன் அரசு காணும் புதிய தீர்வு முயற்சி எதிர்க்கட்சியின் கருத்துடன் பாட்டுடன் எடுக்கப்படவேண்டும் என்று கருதுகிறீர்களா?

பதில்: மக்களின் சம்மதத்துடன் இது இடம் பெற வேண்டும். எப்படி மக்களின் சம்மதத்தைப் பெறுவது? அதனை என்னால் கூறமுடியாது. இல்லாவிடில் மக்கள் கிளர்ந்தெழுந்து புரட்சி நடத்துவர்.

*யுத்த காலத்தில் வாக்கெடுப்பு ஏன்?*

கேள்வி: தீர்வுத்திட்டத்தை சர்வசனவாக்கெடுப்புக்கு விடவேண்டும் என்று கூறுகிறீர்களா?

பதில்: இல்லை யுத்த காலத்தில் சர்வசன வாக்கெடுப்பை நடத்த முடியாது.

கேள்வி: எப்படி மக்களின் மன நிலையை அறிந்து கொள்வது?

பதில்: நாடாளுமன்றக் குழுவின் மூலம், ஆயிரம் உறுப்பினர்களைக் கொண்ட கட்சி நிறைவேற்றுக் குழுவைக் கூட்டலாம். ஆனால் நாட்டின் சம்மதம் பெறாமலேயே நான் இலங்கை — இந்திய உடன்பாட்டில் கையெழுத்திட்டேன்.

ஒரு முடிவு எடுக்கும் போது நீங்கள் வெற்றி காணவில்லை என்றால் நீங்கள் வெளியேற வேண்டியதுதான்.

நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் பெறாமலே அமெரிக்கா யுத்தம் நடத்தியது. இங்கிலாந்தும் அப்படியே செய்தது.

யுத்தம் நடத்தவும் சமாதானத்தைக் கொண்டு வரவும் ஜனாதிபதிக்கு உரிமை உண்டு. (இ-எ)

## இணைந்த கல்லூரி விரிவுரை

வவுனியா இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி விரிவுரைகள் அடுத்த மாதம் (நவம்பர்) ஏழாம் திகதி ஆரம்பமாக உள்ளன.

விரிவுரைகள் இம்மாதம் 7ஆம் திகதி ஆரம்பமாகும் என்று நேற்றைய உதயனில் வெளியானது சரியல்ல.

# சந்திரிகாவின் ஸ்பெயின் பயணம் இரத்தானதன் பின்னணி என்ன?

## பதில் பிரதமர் யார் என்பதில் கருத்து முரண்பாடாம்

கொழும்பு, ஒக். 5

பிரதமர் வெளிநாடு சென்றால் யார் பதில் பிரதமர் என்பதில் ஏற்பட்ட சிக்கல் நிலை காரணமாகவே திருமதி சந்திரிகா குமாரதுங்கா ஸ்பெயின் தலைநகர் மாட்றிடில் தற்சமயம் நடைபெறும் உலகவங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் வருடாந்த மாநாட்டில் கலந்துகொள்ளச் செல்லவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பதில் பிரதமராக அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்காவை நியமிக்க சந்திரிகா விருப்பம் தெரிவித்தார்.

ஆனால் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. அமைச்சர்கள் சி. வி. குணரத்ன, அனுருத்த ரத்வத்த ஆகியோரின் பெயர்களும் இதற்கு பிரஸ்தாபிக்கப்பட்டன.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, அமைச்சர் லஷ்மன் ஜெயக்கொடியின் பெயரை பிரஸ்தாபித்தார். இறுதியில் தமது ஸ்பெயின் பயணத்தை சந்திரிகா ரத்துச் செய்துவிட்டார். (எ)

## புலிகளின் குரல் வானொலியில்

**05 — 10 — 1994**

**புதன் இரவு**

- ★ 8-01 — குயிலோசை — சொக்கன் எழுதிய 'மானத்தமிழ் மறவன்சங்கிலியன்கூத்தின் இறுதிப் பகுதி''
- ★ 8-20 — இலங்கை இந்திய கூட்டுச் சதியால் சயனைட் அருந்தி வீரச்சாவெய்திய, பன்னிரு வேங்கைகள் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி— தி. அரவிந்தன் எழுதிய ''நெஞ்சம் மறக்குமா?''
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — நாடகம் — சு. சிவராசா எழுதிய ''எழுதாத பரீட்சை''

**06— 10 — 1994**

**வியாழன் காலை**

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — விடுதலை கீதங்கள்
- ★ 7-30 — செய்திகள்
- 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

# ரோஹணவின் மனைவி-குழந்தைகள் விமானம் மூலம் கொழும்பு வந்தனர்!

கொழும்பு, ஒக். 5

ரோஹண விஜேவீராவின் மனைவியும் அவரது ஆறு குழந்தைகளும் திருகோணமலைக் கடற்படைத் தள முகாமில் இருந்து கடந்த வார இறுதியில் கொழும்புக்கு விமானம் மூலம் கொண்டு வரப்பட்டனர்.

## லண்டன் செல்லலாம் எனத் தகவல்

கொழும்பு லேடி ரிட்ஜ்வே ஆஸ்பத்திரியில் ரோஹணவின் குழந்தைகளில் ஒன்று வைத்திய சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது.

திருமதி விஜேவீராவையும் அவரது குழந்தைகளையும் திருமதி விஜேவீராவின் சகோதரரான டாக்டர் சுபாஷ் சந்திரா பெர்னாண்டோ லண்டனுக்குக் கூட்டிச் செல்லவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகை வெளிவந்தது

யாழ்ப்பாணம், ஒக். 5

நிதர்சனம் நிறுவனத்தினால் மாதம்தோறும் வெளியிடப்பட்டுவரும் மாதாந்த வெளியீடான ''ஒளிவீச்சு'' வீடியோசஞ்சிகையின் ஒக்ஸ்ட் மாத சஞ்சிகை வெளிவந்துவிட்டது.

சிங்கள அரசை திகைக்க வைத்த இரு கரும்புலித் தாக்குதல்கள்—

கேணல் கிட்டு நினைவாக திறந்து வைக்கப்பட்ட சிறுவர் பூங்கா—

மன்னார்த்தீவினுள் ஊடுருவிச்சென்று பொலீஸ் நிலையம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய வெற்றிகர அதிரடித் தாக்குதல்—மற்றும் கலை நிகழ்ச்சிகள் உட்பட பல் வேறு அம்சங்கள் இச்சஞ்சிகையில் உள்ளன. (இ)

# அனுரா அரசியலிலிருந்து விலகியிருக்க விருப்பம்

அரசியலில் இருந்து சிலகாலம் விலகியிருக்க அனுரா பண்டாரநாயக்கா முடிவு செய்திருப்பதாக சண்டே ரைம்ஸ் தகவல் வெளியிட்டிருக்கிறது.

அமெரிக்க பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய அனுரா கடந்த வாரம் தமது நண்பர்களின் கூட்டம் ஒன்றை நடத்தினார். அப்போதே தமது முடிவை அவர் வெளியிட்டார்.

அனுரா மீண்டும் சுதந்திரக்கட்சியில் சேர்வதை, அக் கட்சியில் இருந்து அவருடன் சேர்ந்து வெளியேறிய முன்னாள் எம்.பீக்களான திலக் கருணாரத்தின, பிரதீப் ஹப்பங்கம ஆகியோர் தீவிரமாக எதிர்க்கின்றனர்.

அனுராவை சுதந்திரக் கட்சியில் மீண்டும் சேர்ப்பதற்கு பிரபல வர்த்தகர்களான ஹரி ஜெயவர்த்தனாவும் திருக்குமார் நடேசனும் முயற்சிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

# 'புறொப்பெல்லரை'சேதமாக்கியபின்பே சாகரவர்த்தனாவைத் தகர்த்தனர்!

## கடற்படைத் தளபதியின் அறிக்கையில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 5

சாகரவர்த்தனா கப்பல் புலிகளின் தற்கொலைப் படையினரால் தகர்க்கப்பட முன்னர், கடற்புலிகளின் சுழியோடிகள் அதன் புறொப்பெல்லரை சேதமாக்கியிருந்தனர். இதனால் சாகரவர்த்தனா அங்கிருந்து நகர முடியாதவாறு அதன் நடமாட்டம் முடக்கப்பட்டது.

'சாகரவர்த்தனா' கடற்படைக்கப்பல் விடுதலைப் புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் மொஹான் சமரசேகரா அரசுக்கு சமர்ப்பித்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவதினம் அக்கப்பலில் பணிபுரிந்த படையினரின் கவனக் குறைவே விடுதலைப் புலிகள் அதனைத் தாக்கி அழிப்பதற்குக் காரணமாக இருந்தது என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''மன்னார்க் கடலில் கடற்படைக் கப்பல் ஒன்றின் மீது தாக்குதல் நடத்த விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளனர் என்று கடற்படைக்கு முன்கூட்டியே தகவல் கிடைத்திருந்தது.

இராணுவப் புலனாய்வுத் தலைமையகமும் இது பற்றி எச்சரித்திருந்தது.

அதனை அடுத்து ரோந்துப் பணியில் உஷாராக நடந்து கொள்ளும்படி கடற்படைத் தலைமைக் காரியாலயமும் 'சாகரவர்த்தனா' கப்பலுக்கு உத்தரவிட்டிருந்தது.

தாக்குதல் நடந்த சமயம் 'சாகரவர்த்தனா' நங்கூரமிடப்பட்டிருந்தது. இது கடற்படைத் தலைமையகத்தின் கட்டளைக்கு முரணாக இருந்தது.

வேறு ஓர் இடத்தில் இக் கப்பல் நங்கூரமிட்டிருந்தாகக் கிடைத்த தகவலை அடுத்து, கப்பலை அந்த இடத்தில் இருந்து அகன்று செல்லும்படி கடற்படை தலைமையகம் உத்தரவிட்டது.

அதன் பின்னர் அக் கப்பல் மன்னாரில் உள்ள கடற்புலிகள் தளத்துக்கு எதிராக, 5 கிலோ மீற்றர் தூரத்தில் அரிப்புக் குடா நோக்கி சென்று அங்கு நங்கூரமிட்டது. அந்த இடம், கடற்புலிகள் தளத்தில் இருந்து அக் கப்பலைப் பார்க்கக் கூடிய தூரத்தில் இருந்தது.

கடற்படைத் தலைமையகத்தின் எச்சரிக்கையையும் மீறி 31 மணித்தியாலங்களாக கடற்புலித் தலைமையகத்துக்கு எதிரே உள்ள கடலில் 'சாகரவர்த்தனா' நங்கூரமிட்டிருந்தது.

'சாகரவர்த்தனா'வின் புறொப்பெல்லரை கடற்புலிகள் அனுப்பிய சுழியோடிகள் சேதப்படுத்தினர். கப்பலின் நடமாட்டம் முடக்கப்பட்டுவிட்டதை உறுதி செய்த பின்னரே கடற்புலிகள் வெடிப்பொருள்கள் நிறைந்த இரண்டு படகுகளுடன் தற்கொலைப் படையினரை கப்பலுடன் மோத அனுப்பினர். தற்கொலைப் படையினர் தமக்கிட்ட கட்டளையை வார்த்தைக்கு வார்த்தை நிறைவேற்றினர்'' —

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

# சக்தியின் அருள் பரவும் நவராத்திரி

இன்று சரஸ்வதி பூசை என்று நாம் போற்றி வணங்கும் நவராத்திரி விழா தொடங்குகின்றது. புரட்டாதி மாதம் சுக்கிலபக்ஷம் முதல் ஒன்பது நாள்களும் இத்திருநாள் கொண்டாடப்பட்டு, பத்தாம் நாள் விஜயதசமி என்னும் மகா நோன்பு அனுஷ்டிக்கப்படுகின்றது. இந் நாட்கள் அன்னையின் அருளாட்சி நாட்களாகும்.

இந்த உலகம் இயங்கிக் கொண்டே இருக்கிறது. இதற்கு அளப்பரிய சக்தி வேண்டும். அவ்வாறு உலகத்தை இயக்குகின்ற சக்தியே திருவருட்சக்தி. இந்தத் திருவருட் சக்தியாக, உலகின் சக்திக்கெல்லாம் ஊற்றாக விளங்குபவள் அன்னை பராசக்தியே. இச் சக்தியே வீரத்தைத் தரும் துர்க்கையாகவும், செல்வத்தைத் தரும் திருமகளாகவும், கல்வியைத் தரும் கலைமகளாகவும் நாம் போற்றி மும்மூன்று நாட்களாக வழிபடுகின்ற காலமாக நவராத்திரி விரதம் அமைகின்றது.

இப் பூவுலக வாழ்க்கை நன்கு நடைபெறுவதற்குச் சக்தியின் என்னென்ன பகுதிகள் என்னென்ன பாங்கில் அமைந்திருக்க வேண்டும் என்பதைத் துர்க்கா தேவியின் சொருபம் நன்கு விளக்குகின்றது. பிரபஞ்சம் முழுவதும் அவள் பிரகாசித்துத் தீவினைகளை அழித்து அருளாட்சி செய்கிறாள். சக்தி பூசை செய்து வணங்குபவர்களுக்கு எல்லாக் காரியங்களும் சித்தியாகும். பேராற்றலைப் பெறுவார்கள்.

அன்னை பராசக்தியான உமை, சிவபெருமானின் உடம்பில் பாதியைத் தனதாக்கிக் கொண்டவள். இவ்வாறு சிறப்புப் பெற்ற தேவிக்கு இரு வடிவங்கள் உள்ளன. ஒன்று சாந்த வடிவம், மற்றொன்று அச்சுறுத்தும் வடிவம்.

உலகையும் அதில் வாழும் உயிர்களையும் காத்து அருள் செய்யும் போது சாந்த வடிவையும், அசுர [illegible] தீயவற்றை அழிக்கும் போது [illegible] துர்க்கையாகவும் காட்சியளிக்கின்றாள். நவராத்திரியில் முதல் மூன்று நாள்களும் துர்க்கையையே வெற்றியை வேண்டி வழிபடுகின்றோம்.

அடுத்த மூன்று நாள்களும் ஆக்கத்திற்கும், அழகுக்கும், அன்புக்கும், செல்வத்திற்கும் உகந்த தெய்வமாக விளங்கும் இலக்குமியை வழிபடுகின்றோம். இவள் செந்நிறமுடைய சிவந்த தாமரைப் பூவிலிருந்து அருள்பாலிப்பாள்.

இறுதி மூன்று நாள்களும் கலைகளின், அறிவின், கல்வியின் தெய்வமான சரஸ்வதியைவணங்குகிறோம். இவள் வெண்மையான தாமரையில் வீற்றிருப்பாள். புத்தகத்தையும், படிக மாலையையும், வீணையையும் தாங்கி நிற்பாள். கவி காளிதாசர், கம்பர் போன்ற புலவர்கள் [illegible] அருள் [illegible] கொண்டாடப்படும். அது மகாநோன்பு என்ற வகையில் மானம்பூத் திருவிழா எனப்படும். மகிடாசூரன் என்ற அரக்கனால் வருந்திய மக்கள் பெரு நோன்பிருந்து அம்பாளை நோக்கிப் பிரார்த்தித்தனர். அன்னை அவர்களுக்கு இரங்கி மகிடாசூரனைச் சங்கரித்து உலகிற்கு மகிழ்ச்சியையும், சமாதானத்தையும் நல்கிய திருநாள் இந்த விஜயதசமி நாள்.

அன்று எமது கோயில்களில் வன்னி அல்லது வாழைமரத்தை நாட்டி, சூரனை அழித்த பாவனையில் அம் மரத்தை வெட்டித் திருவிழாச் செய்வர். இச் சங்கரிப்பின் தத்துவ விளக்கமாக ஆன்மாக்களைப் பீடித்து வரும் ஆணவமலம், அறியாமை, மிருகத்தன்மை ஆகியவற்றைத் தேவி அழிப்பதாகவே நோக்கப்படுகின்றது.

இந்த நாள்களில் நாம் சுவாசிக்கும் காற்றுப்போன்று [illegible] யாகிய பராசக்தியின் அருள் வெள்ளம் பெருகிக் கொண்டிருக்கிறது. ★

**பா. தனபாலன் (பி.ஏ.)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா. வட்டு. திருஞானசம்பந்த வித்தியாசாலை

## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

★ 1ஆம் பரிசு இல. — 2854
★ 2ஆம் பரிசு இல. — 4223

✶ ஆறுதல் பரிசு:

| | | | |
|---|---|---|---|
| 3ஆம் பரிசு இல. — | 2237 | 8ஆம் பரிசு இல. — | 2132 |
| 4ஆம் பரிசு இல. — | 450 | 9ஆம் பரிசு இல. — | 2899 |
| 5ஆம் பரிசு இல. — | 116 | 10ஆம் பரிசு இல. — | 3058 |
| 6ஆம் பரிசு இல. — | 41 | 11ஆம் பரிசு இல. — | 1010 |
| 7ஆம் பரிசு இல. — | 4287 | 12ஆம் பரிசு இல. — | 1115 |

[7945]


விண்ணக வாழ்வின்

## 2ஆம் வருட நிறைவின் நீங்காத நினைவலைகள்



செல்வன்

### குமாரசாமி இராஜேஸ்வரன்

[சிவாஸ் ஐஸ்கிறீம்]

மண்ணுலகு: **14 - 08 - 1971**
விண்ணுலகு: **05 - 10 - 1992**

நெஞ்சிலே அசையாத உறுதியும் நேர்மைத் திறனும் கொண்டு, எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காக, கலங்கரை விளக்காக வழிகாட்டிய எங்கள் அன்புச் செல்வமே! இளம் வயதிலே இறைவன் உன்னைப் பேரன்பு கொண்டு அழைத்தானோ, தம்பி இராஜேஸ்வரா நீ எங்களை விட்டுப் பிரிந்து இறைவனிடம் சென்று ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும், உனது புன்சிரிப்புத் தவழும் முகமும், உனது சிங்கம் போன்ற நடையும், எம் நெஞ்சை விட்டு அகலாது. நீ விட்டுச் சென்ற பணிகள் தொடரவும், கனவுகள் நனவாகவும், உமது நல்லாசியை வேண்டி நிற்கிறோம். உடல் அழியலாம் உள்ளத்து உணர்வுகள் ஒருபோதும் அழியாது. மீண்டும் பிறவாத பேரின்பப் பெருவாழ்வு நீ பெற்றிட சாயீஸ்வரரைப் பிரார்த்திக்கிறோம்.

உமது பிரிவால் துயருறும்;
தாய், சகோதரர், அண்ணிமார், நண்பர்கள், பெறாமக்கள்.

சிவாஸ் ஐஸ்கிறீம்,
கோயில் வீதி,
கொக்குவில்.

[33190]

## மரண அறிவித்தல்கள்

### கார்த்திகேசு சிவலிங்கம்

[காரைநகர்]

காரைநகர், கோவளம், மூக்கம்பிட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது இல. 3, சந்தன மாதா வீதி, பாண்டியந்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம், எட்டியாந்தோட்டையில் காலமாகிவிட்டார்.

அன்னார் கார்த்திகேசு தெய்வானைப்பிள்ளையின் மகனும் கோ. கந்தையா தம்பதிகளின் மருமகனும்(எட்டியாந்தோட்டை), சத்தியாம்பாளின் அன்புக்கணவரும், சசிகரன், சிறிதரன் ரதீஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவாஞானசுந்தரம், சிவநாதசிவம், இந்திராணிஅம்மா, சிவராசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சிவகுமார் (தேசிய சேமிப்பு வங்கி), பரமேஸ்வரி, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும், சிறிஸ்கந்தராசா(கனடா), மோகனாம்பாள் (காரை, கலாநிதி தியாகராசா மகா வித்தியாலயம்) ஆகியோரின் சகலருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எட்டியாந்தோட்டை இந்து மயானத்தில் 04-10-94 செவ்வாய்க்கிழமை நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
க. சிவகுமார்
(மைத்துனர்)

இல. 3, சந்தனமாதா வீதி,
பாண்டியந்தாழ்வு,
யாழ்ப்பாணம்

(33194)

திருமதி

### கருணைநாயகி குமரேசபிள்ளை

(வேலணை மேற்கு)

வேலணை மேற்கு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல. 652, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்டிருந்த கருணைநாயகி (ராசா) 1-10-94 இல் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னாரின் சமக்கிரியைகள் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
குமரேசபிள்ளை
(கணவர்)

(33200)

தங்களுடன் சேருமாறு

# சந்திரசேகரனுக்கு இ.தொ.கா. அழைப்பு

கொழும்பு, ஒக். 5

மலையக மக்கள் முன்னணித் தலைவரும் பிரதி அமைச்சருமான திரு. பெ. சந்திரசேகரன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் சேர்ந்து மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் நன்மைக்காக உழைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இ. தொ. காவின் பிரதம அரசியல் செயலாளர் திரு. ஏ. கந்தசாமி இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறார்.

மலையகத்தில் பல அரசியல் கட்சிகள் தோன்றுவது தோட்டத் தொழிலாளர்களின் நலன்களைப் பாதிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

பல கட்சிகளும் குழுக்களும் உள்ள இன்னொரு ''யாழ்ப்பாணம்''ஆக மலையகம் மாறக்கூடாது. ஒரே குடையின் கீழ் மலையக மக்கள் செயல்படவேண்டும். மலையகத்தில் எந்தவித கிளர்ச்சிக்கும் காரணமாக சந்திரசேகரன் இருக்கக்கூடாது. அந்த நிலை ஏற்பட்டால் மலையகத்தில் எந்தக் கட்சியும் செயல்படமுடியாத நிலை ஏற்படும்.— என்றும் அவர் தெரிவித்தார்.

சந்திரசேகரன் இ. தொ. காவில் சேர வேண்டும் என்ற தமது யோசனையை இ. தொ. கா. தலைமைப்பீடத்துக்கு தான் தெரிவித்துவிட்டதாகவும் திரு. கந்தசாமி தெரிவித்தார்.

மலையகத்தில் எந்தக் குழுவும் ஆயுதம் ஏந்துவதை தாம் விரும்பவில்லை என்று கூறிய திரு. கந்தசாமி, பல கட்சிகள் அங்கு தோன்றுவது ஏதாவதொரு கட்சி ஆயுதம் ஏந்தக்கூடிய நிலையைத் தோற்றுவிக்கலாம் என்றும் சொன்னார். (இ-எ)

## நவராத்திரி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 5

நவராத்திரி விரதம் இன்று ஆரம்பமாகிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள அனேக ஆலயங்களில் இன்று நவராத்திரி பூசைகள் ஆரம்பமாகின்றன.

அம்மன் ஆலயங்களில் நவராத்திரி விரதத்தையொட்டி விசேட பூசைகள் நடைபெறும்.

வீடுகளிலும் நவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்படும்.

விஜயதசமி விழாவான 14-10-94 வெள்ளிக்கிழமை ஆலயங்களில் வன்னி வாழை வெட்டு விழாவும், சூரன் போரும் இடம்பெறும். அன்றைய தினம் சிறுவர்களுக்கு ஏடு தொடக்கலும் இடம் பெறும். கேதாரகௌரி விரதமும் அன்று ஆரம்பமாகிறது. (அ)

## கொழும்பு செல்லும் நோயாளருக்கு

யாழ்ப்பாணம், ஒக். 5

நாளை வியாழக்கிழமை கொழும்பு செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களையும், கூடச்செல்பவர்களையும், இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு, தண்ணீருடன் நாளை காலை 7.00 மணியளவில் யாழ். பொது வைத்தியசாலைக்கு வருமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஒ-51)

## றோட்டரக் சிரமதானம்

தென்மராட்சி, ஒக். 5

சர்வதேச முதியோர் வாரத்தையொட்டி கைதடி முதியோர் இல்லத்தில் யாழ். றோட்டரக் கழகத்தினர் இன்று சிரமதானத்தினை மேற்கொள்ளவுள்ளனர்.

முதியோர் இல்ல வார்ட்டுகள், வளவு ஆலய ,சுற்றாடல் ஆகியவை சிரமதான மூலம் துப்பரவு செய்யப்படும்.

சிரமதான முடிவில் யாழ். மாவட்ட சுகாதார விரிவுரையாளர் எஸ். சிவலிங்கம் கருத்துரை வழங்குவார். (அ-117)

## இன்று

கோப்பாய் கோட்டப் பாடசாலைகளின் சகல அதிபர்களுக்குமான கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறும். (க)

### பன்னிரு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் மகர தோரணங்களாலும், சிவப்பு மஞ்சள் கொடிகளாலும் அலங்கரிக்கப் பட்டுள்ளன.

நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டு, அங்கு பன்னிரு வேங்கைகளினதும் உருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன. மக்கள் இன்று தமிழீழ மண்ணுக்காக மரணித்த அந்த வேங்கைகளுக்கு தமது அஞ்சலியைச் செலுத்துவர். (ஒ-155-173)


Spoken English
With
Grammar
BY
BRITTO
புதிய பிரிவு
ஆரம்பம்:
08-10-1994
காலை 7 — 8 மணி
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி
யாழ்ப்பாணம்.


### புத்தளத்தில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னார்.

மக்கள் கட்டுமீறிச் செயல்பட நேர்ந்ததினால் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட வேண்டியேற்பட்டது என்றும் அவர் சொன்னார்.

அதனை அடுத்து —

அப்பகுதி மக்கள் நேற்று நண்பகல் முதல் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர் என்றும்—

அங்கு பதற்றம் நிலவுவதாகவும் செய்திகள் தெரிவித்தன. (உ-6)

### மண்டைதீவில்...

(1ஆம் பக்கந் தொடர்ச்சி)

லத்தில் இருந்து—

இன்று காலை 9 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு சுதுமலை வடக்கு நாமகள் ச. ச. நிலையத்தில் இறுதி வீரவணக்கத்துக்குவைக்கப்படும். பின் அங்கிருந்து வித்துடல் அணிவகுப்பு மரியாதையுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்படும். (ஒ)

### யுத்தநிறுத்த...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

துருப்புகளை திருப்பி அழைக்கும்படியும் கட்டளைத் தளபதிகள் மேலும் கோரப்பட்டுள்ளார்கள்.

யுத்த நிறுத்த இணக்கம் ஒன்று காணப்பட்டுள்ளதால் மறு அறிவித்தல் வரை யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்படவிருந்த பாரிய தாக்குதல் உட்பட சகல இராணுவ நடவடிக்கைகளும் பின்போடப்படும் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்புதிய நிலைவரம் காரணமாக வடபகுதியில் இராணுவத் தாக்குதல்களை மேற்கொள்வதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 25 படையணி(ரெஜிமெண்ட்) துருப்புகளும் திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர் என்று இவ் வட்டாரங்கள் தெரிவித்ததாக அப்பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த விடயம்குறித்து அரசு சார்பு ஆங்கில மற்றும் தமிழ்த் தினசரிகளும் செய்தி வெளியிட்டுள்ளன.

வடபகுதித் தாக்குதலுக்காக கிழக்கில் இருந்து படையினர் வடக்கிற்கு நகர்த்தப்பட்டிருந்தனர் என்றும் —

ஆனால் பேச்சுக்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காக குடாநாட்டின் மீதான தாக்குதல்களை நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றும் —

பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. இவ்வாறு அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

''நாம் தாக்குதல் ஒன்றை ஆரம்பிக்க இருந்த தருணத்தில் அதனை இடைநிறுத்தி வைக்கும்படி உத்தரவு வந்தது. சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து அரசு எவ்வளவு தீவிரமாக செயற்படுகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு'' என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## இப்படியும் ஒரு செய்தி....

கொழும்பு, ஒக். 5

சந்திரிகா நிறைவேற்று ஜனாதிபதியானவுடன் அனுராதான் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் பிரதமராக வருவார்.

ஐ. தே. க. வட்டாரங்கள் இவ்வாறு கருதுகின்றன என்று ''சண்டே றைம்ஸ்'' தகவல் வெளியிட்டுள்ளது. (உ-எ)

## விதை கிழங்கு கொழும்பு வரும்

கொழும்பு, ஒக். 5

யாழ். மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான 100 மெற்றிக்தொன் விதை உருளைக் கிழங்கு எதிர்வரும் 20 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடையும் என கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

### ஜே. வி. பி....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதித் தேர்தலில் போட்டியிடுவதில் பிரச்சினைகள் இருப்பதாக தேசிய மீட்பு முன்னணியின் தலைவர் ஆரிய புலேகொட தெரிவித்தார். (ஒ-எ-6)

### றாகம...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தப்பட்ட பொலிஸாரை நீதிமன்றத்துக்கு அழைக்க வேண்டி நேரிடும் என்றும் நீதிவான் எச்சரித்தார்.

மேற்படி புதைகுழியில் சுமார்முப்பது சடலங்கள்வரை புதைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதாகவும் நீதிவான் தெரிவித்தார். நேற்று புதைகுழி தோண்டப்பட்ட போது சட்ட வைத்திய அதிகாரி மற்றும் அரச பகுப்பாய்வாளர் ஆகியோர் பிரசன்னமாகி இருந்தனர். மழை காரணமாக நேற்றுப் பிற்பகல் 3.30 மணியுடன் புதைகுழி தோண்டும் நடவடிக்கை நிறுத்தப்பட்டது.

கண்டி மாவட்டத்தில் அங்கும்பொற, பகலகித்துறு கொல்ல ஆகிய இடங்களில் இருப்பதாகக் கருதப்படும் மனித புதைகுழிகளும் நேற்றுத் தோண்டப்படவிருந்தன. ஆனால் கால நிலை சீரின்மை காரணமாக அது 13,14 ஆம் திகதிகளுக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. (அ-உ-எ-4-6)

### இலங்கைக்கான....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி

மகள் துவாரகா ஆகியோர் இருந்தனர்.

திரு. டுவோரையும் புதிய பிரதிநிதி திரு. அல்தரையும் திரு. பிரபாகரனின் குடும்பம் உபசரித்தது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு எடுத்து வரும் சமதான முயற்சிகள் குறித்து விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நிலைப்பாட்டை திரு. பிரபாகரன் இவர்களிடம் விளக்கினார்.

விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன், டாக்டர் பாலசிங்கம் ஆகியோர் அங்கு இருந்தனர்.

இச்சந்திப்பின் பின்னர் — வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஐ. நா. சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் புறப்படுவதற்கு முன்பு திரு. டுபோர் அவரைச் சந்தித்து பிரியாவிடை பெற்றார்.

அச்சந்திப்பின் போது தாம் விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனை நேரில் சந்தித்தது பற்றியும் யாழ் குடாநாட்டின் நிலைவரம் பற்றியும் திரு. கதிர்காமரிடம் திரு. டுபோர் விவரித்தார்.

சமாதானப் பேச்சுகள் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டுமானால் யுத்த நிறுத்தம் ஒன்று பிரகடனஞ் செய்யப்படுவது தவிர்க்க முடியாதது என்பதை திரு. பிரபாகரன் தம்மிடம் வலியுறுத்தியதாகவும் திரு. டுபோர் தெரிவித்தார்.

அமைதி உடன்படிக்கையை செய்துமுடிக்கும் போதுதமது விரிவான எதிர்பார்ப்பையும் திரு. பிரபாகரன் திரு. டுபோரிடம் தெரிவித்தார்.

திரு. டுபோர் பிரியாவிடை பெற்றுச் சென்ற சந்தர்ப்பத்திலும், உண்மையான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பாரம்பரியத்துக்கு ஏற்ப மத்தியஸ்த பங்கு ஒன்றை ஆற்றிவிட்டே சென்றார் என்று ''சண்டே லீடர்'' ஆங்கில வார சஞ்சிகையில் அதன் இணை ஆசிரியர் இக்பால் அத்தாஸ் குறிப்பிட்டிருக்கிறார். (உ-எ)

# சி. ஐ. டி. விசாரணையில், வங்கி உயரதிகாரி!

33 லட்சம் ரூபா பண மோசடி தொடர்பாக கொழும்பு வங்கி ஒன்றில் உயர் அதிகாரி ஒருவரை இரகசியப் பொலீஸார் விசாரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அதிகாரி ''கொம்பியூட்டர் நிபுணர்'' என்று கூறப்படுகிறது.

வங்கியினால் பாதுகாப்பு வரியாக வசூலிக்கப்பட்ட 33 லட்சம் ரூபா பணம் உள்நாட்டு வரித்திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அப்பணம் அப்படி அனுப்பப்படவில்லை என்பது அந்த அதிகாரி லீவில் சென்றபோது கண்டுபிடிக்கப் பட்டதாம். (உ-எ)

## கொழும்பில் வெள்ளம்

கொழும்பு, ஒக். 5

கொழும்பில் வெள்ள அபாயம் ஏற்பட்டிருப்பதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

வெள்ளப் பெருக்கு மட்டத்திலிருந்து இரண்டரை அடி கீழே கிராண்ட்பாஸ் வீதியில் தண்ணீர் மட்டம் உயர்ந்திருந்ததாகவும்—

நேற்றிரவு (செவ்வாய் இரவு) பலத்த மழை பெய்யும் பட்சத்தில் கொழும்பில் வெள்ளப் பெருக்கு ஏற்படக்கூடும்— என்று அஞ்சப்படுவதாகவும் நேற்று மாலை தெரிவிக்கப் பட்டது.

கொழும்பு மாவட்டத்தின் பல இடங்களிலும் கடந்த இரண்டு நாட்களாகப் பலத்த மழை பெய்தது.

வெள்ளப்பெருக்கு ஏற்படும் பட்சத்தில் அதனைச் சமாளித்து நிவாரண வேலைகளைச் செய்வதற்கு தயாராக இருக்குமாறு கொழும்பு அரசாங்க அதிபர் பிரதேச செயலாளர்களைப் பணித்துள்ளார். (அ)

## 'ராவய' ஆசிரியரும் வருவார்

கொழும்பு, ஒக். 5

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் பூர்வாங்க சமாதானப்பேச்சுகளின் போது வரும் பத்திரிகையாளர்களில் ஒருவராக 'ராவய' ஆசிரியர் விக்ரர் ஐவனும் இருப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் பிரதமர் தலைமையில் நடைபெற்ற உத்தியோகப்பற்றற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் 'ராவய' ஆசிரியர் விக்ரர் ஐவனும் அரசுக் குழுவில் ஒருவராக செல்கின்றாரா என்ற கேள்வி எழுப்பப்பட்டது.

சந்திரிகா அதற்கு இல்லை என்றே பதிலளித்தார். விக்ரர் ஐவன் பத்திரிகையாளர்களில் ஒருவராகத்தான் செல்கிறார் என்று அவர் கூறினார். (உ-எ)

### சர்வதேச...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர், பெற்றோர் சேர்ந்து ஆசிரியர்களைப் பாராட்டிக் கௌரவிக்குமாறும்—

இந்நிகழ்வுகளுக்கு ஓய்வு பெற்ற ஆசிரியர்களையும் அழைத்துச் சிறப்புச் செய்யுமாறும் — தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை கேட்டுள்ளது.

நாளை பிற்பகல் 2 மணிக்கு கல்விக் கோட்டங்கள் தோறும் பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள் தலைமையில் நடைபெறும் உலக ஆசிரியர் நாள் சிறப்பு நிகழ்ச்சிகளில் மக்களையும் கலந்து சிறப்பிக்குமாறும் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை—

ஆசிரியர் நாள் சிறப்பு நிகழ்வுகளில் விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர்களும் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை உறுப்பினர்களும் கலந்து கொண்டு உரையாற்றுவர். (அ)

## மாணவன் தற்கொலை

யாழ்ப்பாணம், ஒக். 5

பருத்தித்துறையில் இருந்து வந்து கொழும்புத்துறையில் உறவினர் வீட்டில் தங்கியிருந்து பிரபல கல்லூரி ஒன்றில் படித்து வந்த 15 வயது மாணவன் தனது அறையில் இறந்து கிடக்கக் காணப்பட்ட சம்பவம் நேற்று நடைபெற்றது.

பருத்தித்துறையைச் சேர்ந்த நாகராசா சிவசங்கர் என்ற மாணவன் கொழும்புத்துறை மேற்கில் தமது உறவினர் வீட்டில் தங்கியிருந்து —

சென். ஜோன்ஸ் கல்லூரியில் கல்வி பயின்று வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

தான் தங்கியிருந்த அறையில் சுருக்கிட்டு மரணமானதாகத் தெரிவித்து இவரின் சடலம் நேற்றிரவு யாழ். ஆஸ்பத்திரியில் கையளிக்கப் பட்டது.

மாணவனின் மரணத்துக்கான காரணம் தெரியவரவில்லை. (அ-4)

## கொழும்பு திரும்பினர்

யாழ்ப்பாணம், ஒக். 5

யாழ்ப்பாணம் வந்திருந்த வெளிநாட்டு மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகளில் 17 பேர் நேற்று கொழும்பு திரும்பினர்.

இவர்கள் இங்கு தங்கியிருந்த காலப்பகுதியில் யாழ். மாவட்டத்தில் பாதிப்புக்குள்ளான பல பகுதிகளையும் நேரில் பார்வையிட்டனர். (ஒ-4)


தெல்லிப்பழை
மகாஜனக் கல்லூரி

## ஆசிரியர் தினம் - 1994

மேற்படி தினத்தன்று எமது கல்லூரி ஆசிரியர்களை கௌரவித்து பாராட்டும் நிகழ்வு கல்லூரியில் 06 - 10 - 94 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளதால் அந்நிகழ்வில் கல்லூரிப் பழைய மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

விழாக் குழுவினர்

(33198)



## பிற்போடப்பட்டுள்ளது

இன்று புதன்கிழமை பி. ப. 4-00 மணிக்கு திறந்து வைக்கப்படுவதாக இருந்த
பண்டிதர் குடியிருப்பு
மாதிரி வீடமைப்புத் திட்டம் - 1
திறப்பு விழா
தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது. இந்நிகழ்வு எதிர்வரும்
**11—10—1994** செவ்வாய்க்கிழமை
காலை 10-00 மணிக்கு இடம்பெறும். அத்துடன் பி. ப. 2-00 மணிக்கு பண்டிதர் குடியிருப்பு, பனை பிரிவுகளில் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டியும் இடம்பெறும் என்பதையும் சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,
நடுவப்பணியகம்,
கொக்குவில்.

(33191)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 05 - 10 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org